ஆஸாத்

AZAD

THE ONLY POLITICAL TAMIL FORTENIGHTLY

KUMBAKONAM

FOUNDER: HAJEE M. ABDUR RAHMAN SAHIB

EDITOR: MAULANA ABDUL HAKEEM

CONNEMARA PUBLIC LIBRARY
29 MAY 1955
MADRAS

403/3-50

17—4—50

பொருளடக்கம்

ஷேக் அப்துல்லாவின் வீர கர்ஜனை

தன்மையா — தாய்மையா ?

வீடுபற்றி யெரிகையில் வீணை வாசித்தானும் !

லீக் பத்திரிகையின் மயக்கம்

பிரிவினைக்கு முன், குவாஜா முகம்மது அப்பாஸ்

ஆசிய சமஷ்டி

டாக்டர். ஏ. மதுரம் சன்ஸ்,

60 YEARS
NAME AND FAME

GURU

குழந்தைகளுக்கு
கைகண்ட மருந்துகள்

1. கஸ்தூரி மாத்திரை
2. கோரோஜனை மாத்திரை
3. ஹெல்த் மாத்திரை
4. பால் உப்பு
5. வேப்பெண்ணை தைலம்
6. குரு தைலம்
7. குரு பாலர் டானிக்
8. கக்குவான் மருந்து

குரு தைலம்
மகா சஞ்சீவி

குரு மருந்துசாலை, : திருச்சினாப்பள்ளி.

குரு பல்பொடி சகல தந்த ரோகங்கள் தீரும்.

நாங்கள் நவீன டிசைன்களில் ரிஸ்ட் வாட்சுகள், கிளாக்குகள், அலாரம் டைம்பீஸ்கள் ஏராள மாக ஸ்டாக் செய்திருக்கிறோம் உத்திரவாதத்துடனும். விலை மலிவாகவும் விற்பனை செய்கிறோம்.

ஜலால் & சன்ஸ்,

வாட்சு வியாபாரிகள் (கவர்மெண்ட் ரயில்வே சப்ளையர்கள்)

46, ராட்டன் பஜார், P. T. சென்னை

பிராஞ்சுகள்:— மவுண்ட் ரோடு சென்னை
அபித் ரோடு, ஹைதராபாத்.



பிரசித்தி பெற்ற

பிர்மா புகையிலையை

உபயோகியுங்கள்.

புரோப்ரைட்டர்:— A. N. இரத்தினம் & கோ.,
திருவாரூர்.

'AZAD' NATIONAL TAMIL BI-MONTHLY KUMBAKONAM.

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறை பத்திரிகை கும்பகோணம்.

மலர் 3 | விரோதி௵ சித்திரைமீ 5உ (17-4-1950) ஹிஜ்ரீ 1368 ஜமாதிலாஹிர்மீ 28உ திங்கட்கிழமை | இதழ் 2

ஷேக் அப்துல்லாவின் வீர கர்ஜனை

கடந்த இருபது வருடங்களாக காஷ்மீர் மக்களின் சுதந்திரத்திற்காக அரும்பெரும் பாடுபட்டு வெற்றியடைந்த காஷ்மீர் சிங்கம் **ஷேக் அப்துல்லா அவர்கள்** அண்மையில் சென்னைக்கு வந்து அயர்வில்லாது தொடர்ந்து செய்த சொற்பொழிவுகளால் தென்னிந்திய மக்கள் கூர்ந்து கவனிக்கவேண்டிய பல அம்சங்கள் இருந்தன குறிப்பாக முஸ்லிம்கள் அப்பொன்மொழிகளைப் பின்பற்றித் தங்கள் வாழ்க்கை முறைகளை சீர்படுத்த வேண்டுமென்றும் நோக்கத்தோடு சில பகுதிகளை மீண்டும் பிரசுரிக்கிறேம்.

தமிழ் நாடு தந்த வீரர்கள்—விவேகிகள்

முதல் மந்திரி அவர்களே! சீமாட்டிகளே! சீமான்களே! 1947-ம் வருஷம் முதல் அல்லல் பட்டுத் தவிக்கும் எங்களுக்கு நீங்கள் அளித்து வரும் ஆதரவுக்கும் கொடுத்துவரும் உதவிகளுக்கும் காஷ்மீர் மக்கள் சார்பிலும் என் சார்பிலும் நேரில் நன்றி தெரிவிக்க நான் இங்கு வரும்படியான ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுத்த 44-வது தமிழ் மாகாண அரசியல் மகாநாட்டு நிர்வாகிகளுக்கு வந்தனம் செலுத்துகிறேன். ஆற்றல் மிக்க தென்னாட்டு வீரர்கள் சிந்திய இரத்தத்தினல் காஷ்மீர மக்களும் இந்திய மக்களும் பிரிக்கமுடியாமல் இணைக்கப்பட்டுவிட்டனர். நீங்கள் தந்துள்ள ஆதரவு, அபயம் போர்முனையோடு நின்றுவிடவில்லை. அரசியல் தந்திரம், நிர்வாகம் இத்துறைகளிலும் தவப் புதல்வர்களை அளித்துள்ளீர்கள். சென்னை ஈன்றெடுத்த ராஜாஜியும் கோபால்சாமி ஐயங்காரும் தக்க சான்ருக இருக்கிருர்கள் என்பதை காஷ்மீர மக்கள் நன்கு உணர்கின்றனர்.

மத அடிப்படையில் என்பது மடமையாகும்

காஷ்மீர் விவகாரம் இன்னும் அடிபடுகிறது. அதன் வருங்காலம் குறித்து ஒவ்வொரு இந்தியரும் கவலை காட்டுகின்றனர். காஷ்மீர் போரில் இந்தியர் பங்கு கொள்வது நாடுபிடி ஆசையாலல்ல. மேலும் காஷ்மீர் விஷயத்தில் சில தவருன கருத்துக்கள் உலவுகின்றன. இந்தியா மத அடிப்படையில் பிரிக்கப்பட்டதாகவும் பெரும்பான்மை முஸ்லிம் வாழும் காஷ்மீர் பாகிஸ்தானுடன் இணைக்கப்படவேண்டும் என்றும் பாகிஸ்தனிகள் வாதிக்கின்றனர். பாகிஸ்தானிகளின் கூற்று நேர்மையானதா என்பதை உலக மக்களும் குறிப்பாக இந்திய மக்களும் உணர வேண்டியது அவசியம். திரும்பத்திரும்பக் கூறியுள்ளேன் மீண்டும் கூறுகிறேன். இந்தியா மத அடிப்படையாக வைத்துப் பிரிக்கப்படவில்லை என்று.

ஆளவேண்டும் என்ற ஆசைதான் காரணம்.

துரதிர்ஷ்டவசமாக அரசியல் அடிப்படையில் நாடு பிரிக்கப்பட்டது. பிரிவினைக்கு முன்னர் காங்கிரஸ், லீக் என்ற இரண்டே ஸ்தாபனங்கள் இருந்தன என்பதும் உங்களுக்குத் தெரியும். நாடாளவேண்டும் என்ற லீக் தலைவர்கள் தேசத்தைக் கூறுபோடுமாறு கேட்டனர், அதனல் உண்டாகும் விபரீத பலனை எதிர்பார்த்த காங்கிரஸ் தலைவர்கள் மறுத்தனர் காங்கிரஸ் தலைவர்கள் என்ன கூறியும் முஸ்லிம் லீக் கட்சியினர் உணரவில்லை முடிவில் காங்கிரஸ் விட்டுக்கொடுக்க நேரிட்டது. லீக் கட்சியினர் செல்வாக்கு கொண்டுள்ளவிடமெல்லாம் பிளவு பட்டுப் பிரிந்து நின்றது.

மக்களைக் கலந்தாரில்லை மாபாவி சண்டாளர்கள்!

நான் கூறுவதை நீங்கள் நிச்சயம் ஏற்றுக்கொள்வீர்கள். நாடு துண்டாடப்பட்டபோது மக்களைக் கலந்து கேட்டு முடிவு செய்யப்படவில்லை. இந்துக்களையும் கேட்கவில்லை; முஸ்லிம்களுக்கும் உணர்த்தவில்லை. பிரிவினை உருப்பெற்றது பல லட்சக் கணக்கான மக்கள் பிறந்த பொன்னுட்டைவிட்டு வெளியேறினர். இந்தியாவை விட்டுப் பாக்கிஸ்தானுக்கும் பாக்கிஸ்தானைத்துறந்து இந்தியாவுக்கும் ஓடிய திரளான மக்கள் கதறினர் என்ன நடந்தது என்பது யாருக்கும் தெரியவில்லை. நாடு மதத்தின் காரணமாகப் பிரிக்கப்படவில்லை என்ற என்னுடைய தீர்மானத்திற்கு சான்றுகள் கூறத் தயாராயிருக்கிறேன். நாடு மதத்தின் அடிப்படையில் பிரிக்கப்பட்டிருந்தால் தற்போது இந்தியாவில் வாழ்ந்துவரும் 4 கோடி மக்களுக்கு நீங்கள் புகலிடம் கொடுத்திருக்கமாட்டீர்கள் என்பது எனக்கு நன்ருகத் தெரியும். இந்தியாவில் வாழும் எந்த முஸ்லிமாவது மதத்தின் காரணமாக நாடு பிரிக்கப்பட்டது என்று நினைப்பானேயானல் முதலில் தனக்கு இந்தியாவில் வேலை இல்லை என்பதை அவன் உணரவேண்டும்.

பாராளும் பேராசைக்குப் பாமரமக்கள் பலி

இந்து தர்மத்திற்கும் இஸ்லாமிய கோட்பாட்டிற்கும் போராட்டம் நடைபெற்று வந்ததாக சொல்லி வந்தனர். அப்படி ஒன்றும் அகராதியிலே கிடையாது. ஐக்கிய இந்தியாவில் இருந்தால் சில முஸ்லிம் தலைவர்களும் ஒரு சில தான்தோன்றி மக்களும் தங்கள் விருப்பம்போல் எதையும் சாதிக்க முடியாது என்பதை உணர்ந்தே பிரிவினையை விரும்பினர். சுரண்டவும் சுயநல வேட்டையாடவும் வேசித்தனமான முறையைக் கடைப்பிடித்து மதத்தைக்காட்டி மயக்கினர்; மயங்கினர்.

குதிரை குழியையும் பறிக்கிறது

உலக முழுவதும் பாகிஸ்தானிகள் கிளப்பியுள்ள மற்றுமொரு தவறான எண்ணத்தை மக்கள் உணர வேண்டும். காஷ்மீர் சம்பந்தமாக அகில உலக சர்வ தேச பிரதிநிதிகளிடம் அவர்கள் விடும் நீலிக்கண்ணீர் தான் அது! 'பாருங்கள், பரந்த தேசம் இந்தியா வாகும். வேண்டிய வசதிகள் நிறைந்த நாடும் அதுவே. பாகிஸ்தான் ஒரு சின்ன சகோதரன், இந்தியா எல்லா சுதேச நாடுகளையும் சேர்த்துக்கொண்டிருக்கிறது. போதாக்குறைக்கு ஹைதாராபாத்தும் ஜூனகாத்தும் 'இந்தியாவுடன் சேர்ந்துள்ளன காஷ்மீர் மட்டும் எங்களுடன் சேர்ந்தால் என்ன குடி முழுகிப் போய்விடும்!' இதுதான் முறையீடு. இந்த செப்பிடு வித்தைக்கு ஏமாந்து விடுபவர்கள் இந்தியாவுக்கு ஆயிரக்கணக்கான மைல்களுக்கப்பால் இருக்கும் மனிதர்களே. நீங்களும் இந்த வாதத்திற்கு இரையாகிவிடுவீர்களோ என அஞ்சுகிறேன். இந்தியா காஷ்மீருக்காகத் தொடுத்துள்ள யுத்தம் நாடுபிடி ஆசையாகாது; கொள்கைக்காக நடத்தும் போராகும்.

பிரிவினையின் பயனும்—பிதாவின் முடிவும்

நாடு பிளவுபட்ட பிறகு பெரிய இந்த உபகண்டத்தில் என்னென்ன நிகழ்ந்தன லட்சக்கணக்கான சகோதர சகோதரிகள் இருதரப்பிலும் படுகொலைக்காளாயினர். வகுப்புவாத வெறியை காங்கிரஸ் பலங்கொண்டமட்டும் எதிர்த்து நின்று சமாளித்தது. ஆயினும் ஆயிரக்கணக்கான இந்துக்களும் சீக்கியர்களும பாகிஸ்தானிலிருந்து விரட்டியடிக்கப்பட்டனர், படுகொலை செய்யப்பட்டனர். பெண்ணணங்குகள் கவரப்பட்டனர். அங்கிலையிலும் காந்தி மஹான், 'வெறுப்புக்கு பதில் அன்பே' என பறை சாற்றினர். மேற்கு பஞ்சாபிலுள்ள பாகிஸ்தானிகள் தங்கள் சகோதரர்களுக்கு என்ன தீமை புரிந்தாலும் இந்தியா வாழ் முஸ்லிம்களைக் காப்பதுவே நம் கடனென்றார். இம்மாதிரி கூறுவது தனக்கு ஆபத்தை விளைவிக்கும் செயல் என்பதையும் அவர் உணர்ந்திருந்தார். மதச் சார்பற்ற ஜனநாயக லட்சியத்தில் கண்ணும் கருத்துமாக இருந்து வந்தார். ஆயினும் கடைசியில் அதுவே அவருடைய உயிரைக் கவ்வியது.

காஷ்மீரில் அவர்கள் கைவரிசை

காந்திஜிக்குப்பிறகு இந்தியாவில் மதச்சார்பற்ற ஒரு அரசாங்கத்தை நிறுவுவதில் பண்டித ஜவஹரும் அவருடைய சகாக்களும் ஈடுபட்டனர். காஷ்மீர் மக்கள் என்ன தீங்கிழைத்தனர்? காஷ்மீரில் நூற்றுக்கு 80 விதம் முஸ்லீம்கள்; இருபது விழுக்காடு முஸ்லிமல்லாதார். நூற்றாண்டு நூற்றாண்டுகளாக யாவரும் உடன்பிறந்தவராகவே வாழ்ந்து வருகின்றனர். அதே முறையில்தான் வருங்காலத்திலும் வாழ ஆசைப்படுகின்றனர். பாகிஸ்தான் கண்ணுக்கு இது உறுத்தியது. மேற்கு பஞ்சாபில் அவர்கள் செய்த திருவிளையாடலை காஷ்மீரிலும் அமுல் நடத்தித் தொலைலைதா முன்வந்தனர்.

வீரர் ஜின்னு வெறுங்கையோடேகினர்

1944ம் ஆண்டு தன்னுடைய இருசமுதாயக் கொள்கையில் எங்களையும் (ஏ)மாற்ற லீக் தலைவர் ஜின்னு காஷ்மீருக்கு வந்தார். கிட்டத்தட்ட மூன்று மாதங்கள் தங்கியும் பேசியும் பயனில்லை. அவரைப் பிடித்த கெட்ட காலமோ எங்களுடைய நல்ல வேளையோ நாங்கள் அசைந்துகொடுக்கவுமில்லை. பல்லாண்டுகளாக நாங்கள் செய்த தியாகம் கற்பித்த பாடம் ஒன்று உள்ளது. எங்களுடைய அரசியல் போராட்டத்திற்கும் மதப்போராட்டத்திற்கும் எவ்விதத்தொடர்பும் இல்லை என்பதுவே அது நாங்கள் ஈடுபட்டுள்ள போராட்டம் பொருளாதாரப் போராட்டமேயாகும். எதேச்சாதிகாரம் மடிய, சுரண்டல் ஒழிய, நிலச்சுவான் முறை நீங்க, அந்நிய ஆதிக்கம் புதைக்கப்பட நாங்கள் போரிட்டோம். எங்களுடைய இந்தப்பணியில் இஸ்லாம் மார்க்கம் இந்து தர்மம் ஆக இரண்டும் எதும் செய்வதற்கில்லை. காஷ்மீரில் மதத்தின் போல் தன்னலம் தலை தூக்குவதை நாங்கள் அனுமதிக்கவில்லை. உண்மையான முஸ்லிம்கள் இஸ்லாத்தை நம்பினர். நேர்மையான இந்துக்கள் தங்கள் வழிபாட்டில் நம்பிக்கை வைத்தனர். ஆகவே மதம் எங்களிடையே சகோதரத்வத்தை வளர்த்தது; நாங்களும் மானிட சமுதாயம் வாழத் தொண்டாற்றுகிறோம். குறிப்பிட்ட மார்க்கத்திற்கு அல்லது பிரிவினருக்கு நாங்கள் ஊழியர் அல்ல. மனித வர்க்கம் அனைத்திற்குமே நாங்கள் கடமைப் பட்டவர்கள். அதுவே எங்கள் சன்மார்க்க சமயம்.

வாழ்க காஷ்மீர் வாழ்கபாரதம்

கீதையிலிருந்தும் குரானிலிருந்தும் எடுத்துக் காட்டுகள் மூலமாக உங்களிடையே பேசி என் கட்சியின் போக்கை விவரிக்க நேரமில்லை. காஷ்மீர் போர், குவலயம் ஆளும்பொருட்டல்ல. கொள்கை, லட்சியம்

நிறைவேறத்தான். ஹிந்துக்கள், முஸ்லீம்கள், சீக்கியர்கள், கிருஸ்தவர்கள் முதலான எம்மதத்தினரும் சேர்ந்த எல்லா மக்களும் முழு சுயேச்சையுடன் சரிநிகர் சமானமாக வாழ்ந்துவரும் நாட்டை இந்தியாவில் ஏற்படுத்தவிரும்புகிறோம். இன்றேல் நாம் தனித்து வாழ வேண்டியதுதான். மண்ணாய்ப் போன இரு தேசக் கொள்கை வீக்கர்களுக்கு காஷ்மீரில் வாய்த்துள்ளது. ஹிட்லருக்கு ஸ்டாலின் கிரேடும், நெப்போலியனுக்கு வாடர் லூவும் வாய்த்தது போல; காஷ்மீரின் வெற்றியே இந்தியாவின் வெற்றியாகும். துரதிர்ஷ்டவசமாக நாங்கள் வீழ நேரிட்டால் அது சாமான்யமான காரியமல்ல அது எங்களுடைய நெடுநாளைய போராட்டத்தின் வீழ்ச்சியாகும். எந்த ஒரு லட்சியத்திற்காக காக்கிரஸ் 73 ஆண்டுகள் போராடியதோ எந்த ஒரு லட்சியத்திற்காக காந்தியடிகள் வாழ்வையும் உயிரையும் பலியிட்டாரோ அந்த லட்சியத்தின் தோல்வியாகும்.

சமர் வேண்டேன் சமாதானம் வேண்டும்!

—ஜபருல்லாகான்

பந்தோபஸ்து கவுன்சில் அங்கத்தினர்களிடையே ஜபருல்லாகான் பேசும்போது 'பாகிஸ்தான் போர் நிறுத்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவும் தயாராக இருக்கிறது; ஆனால் பஞ்சாயத்து யோசனைக்கு இந்தியா இணங்கவேண்டும்' என்கிறார். காஷ்மீர் வெறும் மலையும் நிலமும் ஆறும் சூழ்ந்த பூமி என்பதை மட்டும் ஜாபருல்லாகான் அங்கே 40 லட்சம் ஜீவாத்மாக்கள் இருக்கின்றனர்; அவர்களுடைய முன்னோர்கள் ஆயிரமாயிரமாண்டுகளாக வாழ்ந்துவந்த நாடு என்பதை உணரத் தவறிவிட்டார். அவர்கள் அவ்வளவு பேரும் கிள்ளுக்கீரையா?—பண்டமாற்றுப் பொருளா? மக்கள் தலைவிதியை ஒரு மனிதனிடம் அவர் எவ்வளவுதான் நல்லவராயினும்—எப்படி ஒப்படைக்கமுடியும் 40 லட்சம் மக்கள் ஒருவர் முடிவை எப்படி ஏற்றுக்கொள்ளமுடியும் அல்லது எவ்வாறு அந்த முடிவை அவர்கள்மீது திணிக்க முடியும். காஷ்மீர் விஷயத்தில் சட்டபூர்வமாக பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பதை ஜாபருல்லாகான் உணர்ந்து கொண்டு தகராறின் சட்டப்படியான அம்சத்திலும் மற்ற நுணுக்கமான விஷயங்களிலும் அதிகமாக வற்புறுத்தக்கூடாது என்று கௌன்சில் அங்கத்தினர்களிடம் ஓலமிடுகிறார் அது ஒரு ஜீவகாருண்ய பிரச்னை ஜீவகாருண்ய முறையில் தீர்க்கப்படவேண்டும் என்று கூறுகிறார் அவர். மனிதத்தன்மையில் எந்த சிக்கலையும் பாக்கிஸ்தான் நீக்குவதில்லை என்பதுதான் என் குறை. ஒருவேளை மனித சுபாவம் முஸ்லிம்களுக்கு மட்டும் தான் என்று நினைக்கின்றனர்போலும்

பாகிஸ்தான் யோசித்து நன்றாக உணரலும்

நாங்கள் காஷ்மீரில் அமைதி குலையாமல் வாழ விரும்புகிறோம். இந்துக்கள், சீக்கியர்கள், ஏனைய மதத்தினர் எல்லோருடனும் நட்புடன் வாழ விரும்புகிறோம். தன்னுடைய நாட்டில் முஸ்லீமல்லாதாரை துரத்தி படுகொலை செய்து கொன்ற நிலையை காஷ்மீரிலும் உண்டாக்கி தான் செய்த அருள் செயலுக்கு காஷ்மீரை பரிசாக அடைய வேண்டுமென்று பாகிஸ்தான் விரும்புகிறது,

என்ன நடந்தாலும் சரி காஷ்மீர்வாசிகள் தங்கள் கடைசி ஆள்வரை உயிரைக்கொடுத்தாகிலும் கொடுப்பார்களே தவிர ஒரு ஹிந்துவின் மீதோ, சீக்கியசோதரன் மீதோ பாகிஸ்தானிகள் கைவைக்க இடந்தரமாட்டார்கள். பல சந்தர்ப்பங்களில் இதை நடைமுறையில் நிரூபித்துள்ளனர். இதைத்தான் - பாகிஸ்தான் நன்றாக உணரணும்...... காஷ்மீரம் முஸ்லிம்களுக்கு மாத்திரம் தாயகமல்ல. இந்துக்கள், சீக்கியர்கள், புத்தர்கள், கிருஸ்தவர்கள் யாவருக்கும் உரிமை வழங்குமிடம். இதில்தான் இந்தியர்களுடைய உறவும், காஷ்மீர் மக்களின் அன்பும் நிலவுகிறது. ஆகவே காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட விரும்புகிறது.

ஊர்வாயை மூட உலைமூடி இல்லை

காஷ்மீரில் தேர்தல் நடந்தால் பெரும்பான்மையான முஸ்லிம்கள் இந்தியாவுக்கு எப்படி வாக்களிப்பார்கள் என்ற சந்தேகம் எதிரிகளால் கிளப்பிவிடப்படுகிறது காஷ்மீர் பனிப்படலம் சிறந்த நாடு. நாங்கள் எங்கள் தலையை எப்போதும் குளிர்ச்சியாகவே வைத்திருப்போம். ஆனால் இதயம் உறைந்து உணர்விழந்துவிடாது மனம்போன போக்கில் போகமாட்டோம். ஆனால் இந்தியர்களில் சிலர் சிற்சில சமயங்களில் உணர்ச்சிப்பெருக்கால் அறிவு மழுங்கி தகாத செயலில் இறங்கிவிடுகின்றனர். நயவஞ்சகமான வார்த்தைகளால் எங்களை ஜெயித்துவிட நினைத்த பாகிஸ்தானிகளைத் தோற்கடித்தோம். வாளேந்திப் போர்புரிந்தார்களே அதோகதியிலும் அதோகதியாகிவிட்டனர். அது அவர்களுடைய இரண்டாவது தோல்வி.

அன்றே சேர்ந்தோம் என்றும் பிரியோம்

1947-ஆண்டு பாகிஸ்தான் பிடாரிகள் ஆக்ரமிக்கத் தொடங்கினர். . நாட்டில் புகுந்தனர். மக்களைக் கொன்றனர் வீட்டிற்குத் தீ வைத்தனர். பெண்டிரை தூக்கிச்சென்றனர். தலைநகரின் வாசற்படியையும் நெருங்கி விட்டனர். நாட்டின் சிறிய சேனை சிதறிவிட்டது. அரசாங்கம் ஸ்தம்பித்துவிட்டது மன்னரும் தன்னுயிரைக் காக்க ஓடிவிட்டார். அந்நெருக்கடியில் பாகிஸ்தான் எதிர்ப்பு இயக்கம் தோன்றுவதற்கு காஷ்மீர் முஸ்லிம்கள் ஏன் முன் வந்

MARA PUBLIC LIBRARY MAY 1955

— தன்மையா — தாய்மையா ? —

—(வீர. வேங்கடரமணி)—

குழந்தை வீரிட்டழுதது. வெற்றி காண விழையும் வியாபாரியைப்போல், விளம்பர வித்தகனாகிய அந்தக் குழந்தை வீரிட்டழுதது. சுயப்பிரகாசமாகிய அந்தக் குழந்தை சந்தர்ப்பம் தெரியாமல் வீரிட்டழுதது. பெருந்தொல்லையெனப் பெற்றோரால் மதிக்கப்பட்டு மறைக்க முயற்சிக்கப்பட்ட தன் பிறப்பைப பிரகடனப்படுத்திக்கொண்டே அந்தக்குழந்தை வீரிட்டழுதது. அலுவல் மிகுதியால் அறிவிப்பின்றியே தோன்றும் அரசியல் தலைவனைப்போன்று திடீரெனத் தோன்றி தன் பிறப்பைப் பறைசாற்ற விரும்பியதுபோல அந்தக் குழந்தை வீரிட்டழுதது.

அவள் கலங்கிப்போனான். மகிழ்ச்சிக்கும் மறைந்துநிற்கும் இகழ்ச்சிக்கும் இடையே சிக்குண்டு, சிந்தை சிதைந்து கிடந்தாள் அவள்.

அவன் சலங்கிப் போனான். எதிர்பார்த்தும் ஏமாற்றப்பட்ட அவன் கலங்கிப்போனான். கோபத்தினால் அவன் கொடூரம் கொதித்து வளர்ந்தது. "வண்டி தயார் கிளப்பு சீக்கிரம்" என்று மொழிந்தான் ஆத்திரமும், அவசரமும், முகத்திலே முந்திக்கொண்டு தோன்ற. தடுத்துநிற்கும் தானையின் மீது மோதும் தண்ணீரின் தாங்காத கோபக் கூக்குரலைப் போல், அந்த வார்த்தைகளின் அரக்கத்தன்மை, "ஹோ" வென்றிரைச்சலிட்டு எதிரொலித்தது. நிசப்தமாயிருந்த நள்ளிரவிலே

அவள் பேசவில்லை. அவளால் பேசமுடியவில்லை. கருத்தொருமித்ததன் காதல் உள்ளத்தைத் திறந்து காட்ட அவளுக்கு எந்த "ஜாடை"கள் உதவினவோ, அவையே இலக்கிய உலகத்து இலட்சிய வீரர்களைப் போல் இரக்கமுடன் ஆபத்துக்காலத்தில் கூட ஆன உதவியைச் செய்தன. நோக்காட்டினால் நொய்மையுற்றுத்தொங்கிய அவள் நயனங்கள் நயந்து பேசின. நெற்றிப்பொட்டில் துலங்கிய நேர் கோடுகள் ஏழைப் பிச்சைக்காரியொருத்தியின் இச்சகப் பேச்சுகளைவிட இரக்கத்தை வெளியிட்டன. பேச்சுகளை முன்னோக்கித் தயங்கினால். ஏச்சுகளுக்கு தன் விஷயம் வெட்ட வெளிச்சமாகிவிடும் என்று தெரியாத அளவுக்கு முட்டாளில்லாத அவனும் இயன்ற மட்டில் படிக்க முயன்றான்.

புரிந்துகொண்ட பின் அவன் கோபம் பிறிதும் வளர்ந்தது. "யோசித்து நேரத்தை வளர்த்துவதில் எனக்குப் பிடித்தமில்லை. இதெல்லாவற்றையும் முன்னமேயே முடித்திருக்கவேண்டும். கிளப்பு" என்று அதற்றினான் அவன்.

பதமாகாத சோறுபோல, பயிற்சி முற்றுப்பெறாத போர்வீரனைப்போல முடிவற்ற சிந்தனையுடன் அவள் சுருட்டிக்கொண்டுவந்து வண்டியிலே ஒண்டிக்கொண்டாள். தொள்ளைக்காரனின் எல்லையற்ற முன்னெச்சரிக்கையுடன் முடித்து வைக்கப்பட்டிருந்தன ஏற்பாடுகள்.

தனர் ? இந்திய சேனை அங்கில்லை. காஷ்மீர் படை இல்லை. நிர்வாகம் இருந்த இடம் தெரியவில்லை. அது மாத்திரமா ? அந்த சமயத்தில் காஷ்மீர் முஸ்லிம்கள் மனம் வைத்தால் பாகிஸ்தான் பிடாரிகளைக் கைகூப்பி வரவேற்று உபசரித்திருக்கலாம். ஆனால் நடந்ததென்ன ? உங்களுக்குத்தெரியும் உலகமே அறியும் காஷ்மீர் மக்களை ஆயுதமின்றி ஆண் பெண் அடங்கலும் மூத்தோரும் இளையோரும் பால்மணம் மாறாத பாலர்களும் கோல்கொண்டு தாக்கினர். எதிர்ப்பு முன்னணி ஏற்படுத்தினர். கடந்த 17-ஆண்டுகளாக என்னோடு உழைத்தது அல்லல்பட்ட என் சகாக்கள் பிடாரிகள் கையில் சிக்கினர். சந்தைப் பேட்டையில் திறந்த வெளியில் பாகிஸ்தான் பிடாரிகள் அவர்களை சுட்டுத்தள்ளினர்.

காஷ்மீர் மக்கள் பாகிஸ்தானுக்கு வோட் போடுவார்களா ? அப்படி என்ன மாறுதல் இப்போது ஏற்பட்டுள்ளது. ஆனால் ஒரே ஒரு மாறுபாடு அதாவது இந்தியமக்கள் எல்லோருடைய அன்பும் ஆதரவும் காஷ்மீருக்கு இருக்கிறது என்பதுதான் அது காஷ்மீர் தேர்தலில் பாகிஸ்தானுக்கு ஓட்டளித்து இந்தியாவுக்கு துரோகம் செய்யும் என்று எப்படி நினைப்பது.

காஷ்மீரைக் காக்க நேருவைப் போற்றுக

காஷ்மீரில் அடியெடுத்துவைக்க பாகிஸ்தானுக்கு தார்மிக உறவோ சட்டப்படியான உரிமையோ கிடையாது. காஷ்மீர், ஜம்மு பிரதேசத்திலிருந்து எஞ்சியுள்ள பாகிஸ்தானிகள் சென்ற பின்னரே ஒரு சட்டபூர்வமான அரசாங்கம் நிறுவப்பட்டபிறகே தேர்தல் நடைபெறவேண்டும். தேர்தல் என்பது எங்கள் உள்நாட்டு விவகாரம். பாகிஸ்தான் எந்தவிதமான முறையிலும் அப்பிரச்னையை அணுக முடியாது. 'காஷ்மீருக்காக எந்த முறையில் நாங்கள் உதவியளிக்கலாம்' என சில நண்பர் கேட்கின்றனர். இயன்றவர்கள் எங்கள் நாட்டுக்கு வாருங்கள் வரவேற்கத் தயார். ஆனால் காஷ்மீர் மக்களும் நானும் எல்லாவற்றையும் விட நேருவை மேலாக நேசிக்கிறோம். நீங்களும் அவருடைய அரசாங்கத்துடன் ஒத்துழைத்து காஷ்மீர் மக்களுக்கு உதவியளிக்க வேண்டுகிறேன். பாகிஸ்தான் மதவெறி எந்நிலையில் இருந்தாலும் நீங்கள் நிரந்தர அமைதியை வளர்ந்தோங்கச் செய்வீர்களாக.

என்னுடைய குறுகிய அபிப்பிராயத்தில் நீங்கள் காட்டிய அளவுக்கு மீண்டும் நன்றிசெலுத்துகிறேன். ஜேய் ஹிந்த்.

வண்டி கிளம்பிற்று. கூக்குரலிடும் கருங்காலியைப்போன்று கட கட சப்தம் செய்யும் கருப்பிரும்புக்கட்டல்ல அந்தச் சக்கரத்தினுடையது. அயர்ச்சியுற அல்லற் குட்படுத்தியதிபாதிலும், அமைதியாகத் துள்ளிச்செல்லும் ரப்பரடயர்தான். இருட்டெனும் இரகசிய நிலவறைக் குள்ளே, அவள் காரியத்தை முடிக்கவேண்டும்.

சீமாட்டிகள் அமரும் இடத்தில் தான் அவளும் இருந்தாள். சீமாட்டியின் முன்னே சிரித்துப்பேசும் அவனே சீறிக்கொண்டிருந்தான். மென்மையான அந்த 'ரப்பர் டயர்'' கூட அவனுடைய இந்த முரட்டுத்தனத்தை இதற்கு முன் கண்டதில்லை

வண்டி போய்க்கொண்டிருந்தது நேரம் நகர்ந்து கொண்டிருந்தது, அம் மனிதனின் இச்சையெனும் இலஞ்சத்துக்கிணங்க முன்வராமலே.

அவள் பேசினள் ஓரிருவார்த்தைகள். உணர்ச்சியைக் கொட்டிய ஓரிருவார்த்தைகள் உள்ளத்தை உணர்ப்பித்த ஓரிருவார்த்தைகள். இலக்கியச் செழிப்பற்றபோதிலும் இதயத்துடிப்மைக் காட்டிய ஓரிரு வார்த்தைகள்,

" இந்தா. இதுவும்தான் இருந்துவிட்டு பேகட்டுமேன். இரண்டுபேருமாக எங்கேயாவது போய் விடுவோம்."

இதைச் சொல்லுமுன் அவள் எவ்வளவு ஆவலை உள்ளடக்கி யிருந்தாளோ அவ்வளவு ஆவலோடு அவள் அவனுடைய பதிலை எதிர்நோக்கினள்.

ஏமாற்றம் தான் மிஞ்சியது அவள் திரும்ப வில்லை தயங்கவில்லை. பதிலளிக்கவில்லை நகரசுத்தியாளனின் சுருக்கினின்றும் தப்ப தலைதெரிக்க ஓடும் நாய்போன்று மூச்சுவாங்க இழுத்துக்கொண்டோடினன் அவன்.

ஆற்றங்கரை வந்ததும் நிறுத்தினன் அவன்."இதோ பார்! இதிலே அதைத் தூக்கியெறிந்துவிட்டு வந்தால் வா; இல்லை, அதோடு போய்விடு. இரண்டுலே ஒண்ணு சொல், உன் தீர்மானம் என்ன?''

எரி வைத்தும் பிளக்கமுடியாத முடிச்சுக் கருகக் கட்டையைப் போல் இரக்கமற்ற உள்ளத்துடன் அவன் இவ்வளவு கூறி நிறுத்திக்கொண்டான்.

வேண்டுமென்றே குழியிற்றள்ளி யானையிடம் விசுவாசப் பிரமாணம் வாங்குவது போன்றிருந்தது அவன் செய்கை.

பொறியிலகப்பட்ட எலியினும் சுருசுருப்புடன் அவள் மூளை வேலையில் முனைந்தது "கொடியை நாடு, சேயை மற'' என்றது குள்ள லைஹட்போன்ற அரக்க உள்ளம்.

அன்பு உள்ளம் மேடையேறு முன்னரே, அவன் துரிதப்படுத்தியது தாங்காமல் குழந்தையுடன் தண்ணீரைநோக்கி நடந்தாள். நல்லவேளையாக குழந்தையின் உறக்கம் அவள் குமுறல்களைக் கிளப்பாதிருந்தது

கரையிலே உட்கார்ந்துகொண்டாள். கடினப் படுத்திக்கொண்டாள். கையிலெடுத்தாள் குழந்தையை........................ ஏங்கிய உள்ளத்துடன் திரும்பிப் பார்த்தாள்

" கஷ்டமாயிருந்தால் கண்ணை மூடிக்கொள் என்று யோசனை கூறினன் அக்கொடியவன்; நாளையே தூக்கு தண்டனையை எதிர்நோக்கிக் கலங்கும் கைதியை நல்ல தூக்கத்திற்கென தொந்தரைப்படுத்தும்கருணை (?) மிகுந்த காவலாளி போல. கைம்பெண் அவள்மீது தனக்கிருந்த காதல் மாட்சியின் முடிவற்ற நீட்சியைப்பற்றி மிகைபடக் கூறி மயக்கிய அவன் இன்று கடுகளவ குற்றத்தையும் காரணங்காட்டிகை விடத் தயாராயிருந்தான்.

அவள் குழந்தையைக் கையிலெடுத்தாள். துயில் நீங்கப்பெற்ற அந்தக் குழந்தை தூய புன்னகையொன்று புரிந்தது அடடா! இறைவன் படைப்பிலேதான் என்னநேர்த்தி! இடி மின்னல்களுக்கிடையே புகுத்திய காந்த சக்தியை, இறைவன் இந்தப் புன்சிரிப்பிற்கும் கூட அல்லவா பகிர்ந்தளித்திருக்கிறன்.

அவள் தண்ணீரில் அதன் தலையை நனைத்தாள். பசி பொருக்கர்த பசுங்கன்று, பிரிக்கப்பட்டுச்செல்லும் தாயைப் பார்த்துக் கதறுவது போன்று வீரிட்டது குழந்தை. கத்தியின்றி, ரத்தமின்றி யுத்தம் புரிந்த' சத்திய வள்ளல் சாந்த காந்தியின் அஹிம்சை ஆயுதம்போல், உயிர் உலைக்களத்திலே குழந்தைக்குற்ற ஆயுதம் அந்த 'கிரீச்' சொலிதான் வழி திறக்கப் பட்டு, வரவு நோக்கிநிற்கும் ஸ்டேஷனிலே விரைவாக நுழையும் " எஞ்சினை "ப்போல் அந்த ஒலி எங்குமே, எதிர்ப்பின்றியே இடம்பெறுகின்றது.

ரயில் ஓட்டியின் கையில் தாவிச் செல்லும் சாவியைப்போல அவள் பாய்ந்து நின்று அலறும் குழந்தையை கையிலெடுத்துக்கொண்டு அதனின்றும் தன் பார்வையை திருப்பாமலே தணிந்த குரலிலே திடமாகக் கூறினள். தனக்குள்ளேயே கூறிக் கொண்ட போதிலும் அவை அவன் காதிலும் விழுந்தன.

" கைம்மை மீறிய குற்றவாளியாக இருப்பேன். கொலையாளியாகமாட்டேன் '' என்று

தன்மை பணிந்து தாய்மைக்கு இடமளித்தது. தூய்மையற்றதாயினும் அந்தத் தாய்மையின் தீர்மானக் குரலிலே தனித்துநிற்கும் துணிவு இருந்தது.

மேட்டிலிருந்து பள்ளத்தை நோக்கி விழையும் தண்ணீரைத் தடுத்துத் திருப்பயாரால்தான் முடியும்?

வீடுபற்றி யெரிகையில் வீணை வாசித்தானாம்!

முஸ்லிம் உதவி நிதிக்கு லீக் தலைவர் சுற்றுப் பிரயாணம்?

அடியிற் கண்ட கட்டுரை 'ஆஸாத்' அன்பர் அனுப்பியுள்ள ஒன்று கொஞ்சம் கடுமையாக இருக்கிறது. அவருடைய மனம் நிலைமையைக் கவனித்து கொதித்திருக்கிறது. இன்று யு பி.-யிலும் லீக் பார்லிமெண்ட் மெம்பர்கள், எம் எல். ஏ.-க்கள் எல்லோருமாகச் சேர்ந்து, எச். லாரியின் தலைமையில் மகாநாட்டை வெற்றிகரமாக நடத்தி, உடனே முஸ்லிம்களெல்லோரும் வகுப்புவாதமற்ற ஸோஷலிஸ்ட் அல்லது காங்கிரஸ் கட்சி எதிலும் சேர்ந்துகொள்ளலாம் என்று தீர்மானம் செய்துவிட்டார்கள். பூரா இந்தியாவில் எங்கும் லீகை முஸ்லிம்கள் விட்டுவைக்கவில்லை. சென்னையில் மாத்திரம் ஒரு தனி மனிதன் உலகத்தில் நடந்துவரும் சம்பவங்களைக் கவனியாது, லீகை வைத்துக் கொண்டும், ஏன்? அதற்காக பற்பல பத்திரிகைகளை பிரசாரம் செய்துகொண்டும் (குறிப்பாக 'முஸ்லிம்' என்ற பத்திரிகை) வருகிறன். பாகிஸ்தானின் தலைவருடைய சரித்திரங்களும் ஏன்? அதனுடைய ஆர்வம் பொருந்திய படை பலத்தையும் வருணித்துக்கொண்டிருப்பதைப் பார்த்தால் ஒரு முஸ்லிமினுடைய மனம் கொதிப்படையும் என்பதில் சந்தேகமில்லை. இன்றுமே. வங்கத்திலிருந்து சொத்தையும், சுகத்தையும் அளவில்லா பொருள்களையும், தங்களுக்குற்ற மற்ற யாவற்றையும் விட்டுவிட்டு பாகிஸ்தான் நரகக் குழியில் விழுந்து அவஸ்தைப்படுகின்றனர் என்பதையும் அவர் கவனித்தாரில்லை. இன்று ஒவ்வொரு முஸ்லிமும் பாகிஸ்தானுடனே லீகுடனே தனக்கு எவ்வித தொடர்புமில்லையென நிரூபிக்கும் நாள். ஹிந்து முஸ்லிம் ஒற்றுமைக்காக குறைந்த பட்சம் சென்னையிலாவது இதே நிலைமை நீடிக்கும் உபாயங்களைக் கையாளவேண்டும். லீக் பிரசாரத்திற்கு முஸ்லிம் வாலிபர்கள் கிளம்பியதைப் போல, இன்று ஒரு தேசம், ஒரு லட்சியம், ஒரு சமுதாயம் என்ற முறையில் தேசத்தில் பரவிவரும் ஆவேசத்தை முடிவு கட்ட வேலை தொடங்கவேண்டிய இச்சமயத்திலும் லீக் பிரசாரத்திற்கு, முஸ்லிம்களிடம் உதவி கோருவதும், அளிக்கப்படுவதும் உலக மகா ஆச்சரியங்களுள் ஆச்சரியம் என்றுதான் கூறுவோம்,

—(ஆசிரியர்)

அன்று ரோமாபுரி பற்றியெரிகையில் நீரோ பிடில் வாசித்துக் கொண்டிருந்தான். இது உண்மையோ பொய்யோ; இன்று இருபதாம் நூற்றாண்டில் நடப்பவற்றைக் கண்டால் உண்மை என்று நிச்சயமாய்க் கூறலாம். இரு சமுதாயக்கொள்கை அடிப்படையில் பாகிஸ்தான் கோரப்பட்டதும் "இதனால் பெரும் அளவு பாதிக்கப்படுபவர்கள் முஸ்லிம்களே. பாகிஸ்தான் பிரிவினை செய்யப்பட்டால் 10 கோடி இந்திய முஸ்லிம்கள் அழிந்துவிடுவர். இரு சமுதாயக் கொள்கை இஸ்லாமுக்கு முற்றிலும் விரோதம். அதனால் வருங்கால இந்தியா பாதகமடையும். பாகிஸ்தான் கோருபவர்கள் நாளை இறந்துபோய்விடுவர் வருங்கால சமூகம் நம்மைக் குறை கூறும்" என்று மௌலானா ஆஸாத், மௌலானா ஹுஸைன் அஹமத் மதனி போன்ற அரசியல் மதாசார ஞானிகள் எவ்வளவோ சொல்லியபோதும் காலஞ்சென்ற ஜின்னா சாயபு ஒரே பிடிவாதமாய் நாட்டைத் துண்டாடிச் சென்றார். அவரும் அவரது சிஷ்யகோடிகளும் தூண்டிய வகுப்புவாதத்தின் பயனை 1947-ம் ஆண்டு கலவரங்களின்போது கண்டோம். இரு சமுதாயப் பேய் காந்திஜியைப் பலிகொண்டது. அவரது ஆத்மதியாகம் நாட்டில் ஏற்பட்டிருந்த கொந்தளிப்பை அடக்கிவிட்டது. இவை யாவற்றிற்கும் காரணமான ஜின்னா இறந்து இறைவனிடம் தான் செய்தவற்றிற்குப் பதில் சொல்லப்போய்விட்டார். அவருடன் அவர் சிருஷ்டியான லீக்கும் வகுப்புவாத வேறுபாடுகளும் தொலைந்து விட்டனவென நினைத்தோம்.

இந்தியா மத சார்பற்ற நாடு என்றும், பாகிஸ்தான் இஸ்லாமிய நாடு என்றும் பிரகடனம் செய்யப்பட்டது. இந்திய சிறுபான்மையினருக்கு, பெரும்பான்மையினருக்கு உள்ளது போன்ற அரசியல், பொருளாதார, சமூக, சிந்தனை உரிமைகள் அளிக்கப்பட்டன. யாவருக்கும் முன்னேற்ற வசதிகள் ஒரே விதமாகக் கிடைத்தன. மத அடிப்படையில் இந்தியர்களிடையே எவ்வித வித்தியாசமும் பாராட்டப்படமாட்டாது என்று குடியரசு அரசியல் கூறுகிறது. ஆனால்………… இந்திய முஸ்லிம்களைக் கவலையின்றி வாழவிடமாட்டேன் என்று பாகிஸ்தான் சபதம் செய்துள்ளதைப்போல் தோன்றுகிறது தன் துரோக எண்ணம் வெற்றி பெற பல விதங்களில் வகுப்புவாதத்தைத் தூண்டி, ஹிந்து முஸ்லிம்களிடையே வெறுப்பை உண்டு பண்ணுகிறது நாள் தவறினாலும் பாகிஸ்தான் பித்தலாட்டங்கள் தவறுவதில்லை,

மேற்கு பாகிஸ்தான் சிறுபான்மையினரை பல துன்பங்களுக்காளாக்கி வெளியேற்றிவிட்டது. ஏதாவதொரு குழப்பத்தைத் தூண்டி இந்திய சர்க்காருக்கும் முஸ்லிம்களுக்கும் மீளாத்தொல்லை கொடுத்துக் கொண்டேயிருக்கிறது. இவை யாவற்றிற்குப் சிகரமென கி. வங்காள அட்டூழியங்கள் முளைத்தன. பாகிஸ்தான் சர்க்காரும் பொறுப்புள்ள தலைவர்களும் தான் கி. வங்காள அட்டூழியங்களுக்கு முக்கிய காரணம். ஜின்னா சாயபு தூண்டிய வகுப்பு வாதத்தை நாடு துண்டாடப்பட்டபின் கைவிட்டிருக்கவேண்டும். தன் பிரஜைகளின் உயிருக்கும் உடைமைக்கும் அபாயம் ஏற்படாதவாறு பாதுகாப்பளித்திருக்க வேண்டும். தன் கடமையை உணராது, இஸ்லாமிய நாடென்றும் முஸ்லிம்களைத்தவிர மற்றவர்களுக்கு நாட்டில் இடமில்லையென்றும் பிரசாரம் செய்துவந்தது. அதற்கேற்றாற்போல் பொறுப்புள்ள தலைவர்களும் வகுப்புவாத வெறியர்களைத் தூண்டிவிடலாயினர். சமூக ஒற்றுமைக்குப் பாடுபடக்கூடிய தலைவர்கள் அங்கு

சிறையிலடைக்கப்பட்டனர். கான் அப்துல் கப்பார் கானும் அவருடைய செஞ்சட்டைத் தொண்டர்களும் இன்றுவரை சிறைகளில் வாடிக் கொண்டிருக்கின்றனர் பிரிவினைக்குப்பின் சமூக ஒற்றுமை ஏக சமுதாயம் முதலிய உன்னத லட்சியங்களை பிரசாரம் செய்துவந்த மௌலானா மௌதூதியும் அவர் சகாக்களும் சிறைக்குள் தள்ளப்பட்டனர். உண்மை மதக் குருக்கள் பலர் கொலை செய்யப்பட்டனர். ஆகவே சிங்கராஜா ஆண்டவிடத்தில், கழுதை ஆள முற்பட்டாற்போல் அரசியல் ஞானமோ, மதப்படிப்போ மருந்துக்கும் காணமுடியாத சிலர் ஒத்து ஊத பாகிஸ்தான் சர்க்கார் சிருஷ்டி செய்யப்பட்டது அவ்வடி முட்டாள்களும் வகுப்புவாத வெறி பிடித்த பாகிஸ்தான் பத்திரிகைகளும் செய்த துரோகமே இன்று நடைபெறும் கிழக்கு வங்க அட்டூழியங்களுக்குக் காரணம்.

முஸ்லிம் என்ற புனிதப்பெயருடன் பாகிஸ்தானிகள் செய்யும் காரியங்கள், மானிட வர்க்கத்தையே பழிப்தாயிருக்கின்றன சொத்துக்களைக் கொள்ளையடிப்பதும் அப்பாவிகளைக் கொலை செய்வதும், பெண்களை மானபங்கப் படுத்துவதும், பலாத்காரமாய் மத மாற்றம் செய்வதும் போன்ற மிருகத்தனமான காரியங்களை இன்று கி. வங்க பாகிஸ்தானிகள் செய்து வருகின்றனர் அக்கிரமத்தை சகிக்கமுடியாது எண்ணற்ற ஹிந்து சகோதரர்கள், மனைவி மக்களைப் பறிகொடுத்து, வீடு வாசலை இழந்து தலை தப்பினாற் போதுமென்று மே. வங்கத்திற்கு ஓடி வருகின்றனர். அவர்களுடைய சோகக் கதைகளைக் கேட்கவும் பரிதாபமாயிருக்கிறது. அவர்களுடைய நிலைமையைக் காண மனித உள்ளம் படைத்த யாவரும் மனமுருகியுள்ளனர். மே. வங்கத்திலிருந்து அதிக அளவு முஸ்லிம்கள் வெருண்டு ஓடுகின்றனர்,

பாகிஸ்தான் படுகொலைகளால் கோபமடைந்த சில ஹிந்து சகோதரர்கள் இந்திய முஸ்லிம்களிடம் பழிக்குப் பழி வாங்க நினைக்கின்றனர். இருநூறாண்டு பிரிட்டிஷ் அரசாங்கம் விளைத்த விஷ வித்துக்கள் யாவற்றிலும் அபாயகரமானது ஆகவே கல்கத்தாவிலும் கலவரங்கள் மூண்டன. ஒரு சிலர் கொல்லப்பட்டனர் பெரும் அளவில் கொள்ளைகள் நடந்தன.

ஆனால் இச்சம்பவங்கள் அனைத்திற்கும் மூல காரணம், பாகிஸ்தான் கடைப்பிடித்துள்ள இரு சமுதாயக்கொள்கையே என்பது திண்ணம் இரு சமுதாய லட்சியத்தைக்கொண்டு தோன்றிய லீக் விதைத்த வினையின் பயனே இன்றைய தொல்லைகள் வகுப்புவாத அடிப்படையில் நாட்டைத் துண்டாடியது மாபெரும் தவறெனினும், வகுப்பு வாதத்தைத் தாண்டிய முஸ்லிம் லீக் மத சார்பற்ற இந்தியாவில் இருந்துவருவது அதைவிடப் பெரிய தவறாகும்.

கி. வங்க அட்டூழியங்களை இந்தியாவெங்கிலுமுள்ள முஸ்லிம்கள் ஒருமுகமாய்க் கண்டித்துள்ளனர். தேசிய முஸ்லிம்கள் அன்றும் வகுப்புவாதத்தைக் கண்டித்தனர்; இன்றும் கண்டித்து வருகின்றனர். அக்ரமம் எங்கு நடைபெறினும் அதைக்கண்டிப்பது முஸ்லிம்களின் முக்கிய கடமை என்பதை அவர்கள் அறிவர். அவர்கள் கி. வங்கம் சென்று உயிரை தியாகம்செய்தாகிலும் அக்கிரமங்களுக்குமுடிவுகட்ட முன்வந்துள்ளனர். அவர்களுக்கு உயிர் பெரிதல்ல; நேர்மை, சத்தியம், நியாயம் முதலிய உயரிய லட்சியங்கள் உயிரைவிட உயர்ந்தவை என்பது அவர்கள் நம்பிக்கை.

ஆனால் ....முஸ்லிம் என்று கூறிக்கொள்பவர்களில் பதவியே சொர்க்கம், செல்வமே வாழ்க்கை லட்சியம் என நினைத்து சுயநலத்திற்காக எத்தகைய துரோகத்திற்கும் அஞ்சாத கயவாளிக் கும்பலும் இப்புனித நாட்டில் இருக்கிறது. நாடு நாசமடையினும் கிடைத்தவரை சுரண்டுவதில் நாட்டங் கொண்டவர்களும் இந்நாட்டில் உள்ளனர். பூங்காவனத்தின் நறுமணத்தினூடே மலநாற்றம்போல் நாமும் இருக்கிறோம் என்று கூறுவதுபோல் காந்திஜி, ஜவஹர்லால், மௌலானா ஆஸாத், ஹுசைன் அஹ்மத் மதனீ போன்ற உத்தம புருஷர்கள் தோன்றிய இப்பாரத நாட்டில் பாகிஸ்தான் பக்தர்கள் போன்ற கயவர்களும் இருக்கின்றனர். கி. வங்காள அட்டூழியங்கள் மலிந்து, பொதுமக்கள் பல்லாயிரக் கணக்கில் வீடு வாசல்களையிழந்து, மனைவி மக்களைப் பறிகொடுத்து உயிர் தப்பினது போதும் என்று இந்தியாவில் அகதிகளாய்க் குவிந்து வருகையில் கல்கத்தா, பரில்லி, மீரட், ஜங்பல்பூர் முஸ்லிம்கள் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கையில் இக்கொடுமைகளுக்கு மூலகாரணமாயிருந்த லீக் கயவாளிக்கும்பலின் தலைவர் இந்திய முஸ்லிம்களுக்கு ஏக தலைவன் யான் என்று வீரம் பேசும் வீரசிகாமணி, வகுப்புவாத சகதியில் ஊறி நாற்றமெடுத்த கவைக்குதவாத மட்டை, நாட்டைத்துண்டாடி எண்ணற்ற அப்பாவி மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் உலை வைத்த நய வஞ்சகர், மத வெறியைத் தூண்டி இரு சமுதாயக் காம்போதி பாடி மக்களிடையே தீராப்பகைமையை உண்டு பண்ணிய இஸ்மாயில் கும்பல், அல்லல் படும் மக்களுக்கு ஆறுதல் கூறவோ, பாகிஸ்தானிகள் புரியும் பேய்க்கூத்தைக் கண்டிக்கவோ முற்படாமல், வகுப்புவாதப்பேய்க்கு தூபம் போடும் ஒரு பத்திரிகைக்கு நிதி திரட்ட சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருக்கிறார் ரோமாபுரி நீரோவின் வரலாற்றை லீக் தலைவர் இருபதாம் நூற்றாண்டில் மெய்ப்பிக்கிறார்.

கட்சிப் பத்திரிகைக்கு நிதி திரட்டவேண்டிய அவசியந்தான் என்ன என்பதை ஆராய முற்பட்டால் லீக் தலைவர்கள் கடந்த காலத்தில் கொண்டிருந்த சுய

நல மனப்பான்மை இன்னும் அவர்களைவிட்டகலவில்லை என்று புலனாகும். முஸ்லிம் மக்களின் ஏகப்பிரதிநிதி ஸ்தாபனம் லீகே என்றும் அவர்கள் வாழ்விலும் தாழ்விலும் தலைமை தாங்கக்கூடிய ஏகதலைவன் யானே என்று வீரம்பேசிப்பொதுவாக ஹிந்துக்களும் குறிப்பாக காங்கிரஸ்காரர்களும் முஸ்லிம்களின் பரமவைரிகளென அவர்களுடைய மதம், கலாச்சாரம் இரண்டையுமே அழிக்க நினைக்கின்றனர். காந்திஜி, ஜவஹர், பட்டேல் முதலிய தலைவர்கள் ஹிந்து தலைவர்கள். ஆகவே லீகர் அல்லாத் தேசீய முஸ்லிம்கள் இஸ்லாமின் துரோகிகள். முஸ்லிம்களுக்கும் இஸ்லாமிய தர்மத்திற்கும் ஆபத்துண்டாக்கும் சுயநலவாதிகள் என்று பிதற்றியபோதிலும் பீஹார் முஸ்லிம்கள் படுகொலைக்காளானபோது, அவர்களுக்கு ஆறுதல் கூறாது "நான் குளிர்ந்த ரத்தமுள்ள தத்துவ ஞானி" என்று கூறி பசப்பியும், நவகாளி படுகொலைகள் மலிந்தபோது முஸ்லிம்களின் அடாச் செயல்களைக் கண்டிக்காது கலவரங்களுக்கு தூபம் போட்டுக்கொண்டிருந்த ஜின்னா சாயபின் வாரிசான இஸ்மாயில் கும்பல் இன்று தங்கள் குருவின் சரித்திரத்தை நடித்துக்கொண்டிருக்கின்றனர்.

கி. வங்க ஹிந்து சகோதரர்கள் துயருறுகையில் பாகிஸ்தானிகளைக் கண்டிக்கமுயலாவிட்டாலும் பயங்கர படுகொலைசெய்யும் பாதகர்களான கம்யூனிஸ்டுகளுக்கு வக்காலத்துபேசி, சட்டசபைகளிலே கர்ஜிக்கின்றனர். கல்கத்தா, மீரட், பரில்லி டில்லி, சுவீகார், முராதாபாத், பீலி, பீத் முதலியவிடங்களில் முஸ்லிம்கள் பீதியடைந்து உயிருக்கு மன்றாடிக்கொண்டிருக்கையில் இவ்வனைத்திற்கும் காரணமாயிருந்த இரு சமுதாய பக்தர்கள், நாட்டைத் துண்டாட உதவிய கயவாளிக்கும், அவர்களுக்கு ஆறுதல் கூறவாயசைக்காவிடினும், வகுப்புவாதவெறியைத் தூண்ட முயலும் ஒரு பத்திரிகை உதவிநிதி என்று கூறி பாமரமுஸ்லிம்களை முடிந்த அளவு சுரண்ட சுற்றுப் பிரயாணம் செய்கின்றனர்.

பிரிவினைக்குப்பின் லீக்நிதியில் பங்கு கிடைத்தால் வருங்காலவாழ்க்கையை உல்லாசமாகக் கழிக்கலாம் என்றுகருதிபாகிஸதானுக்குஓடோடிச்சென்று கிடைத்தமட்டும் கொண்டுவந்து இன்று வரை சுகவாழ்க்கை நடத்திவந்த கயவர்கள் இன்று முஸ்லிம்களைக் கொள்ளையடிக்க நினைக்கின்றனர். ஆகவே அவர்கள் இவ்வித துரோகக் காரியங்களை விட்டு நேர்மையுடன் வகுப்புவாதத்தை விட்டு காங்கிரசில் சேர வேண்டும். பாகிஸ்தானிகளுக்கு நல்லபுத்திபுகட்டமுன் வரவேண்டும். கஷ்ட நஷ்டங்களுக்குள்ளான ஹிந்து சகோதரர்களிடம் அனுதாபம் காட்ட வேண்டும். முஸ்லிம்களுக்கு ஆறுதல் கூறி தைரியமூட்டவேண்டும். இரு சமுதாய கொள்கலையை உதறித்தள்ளி, நாட்டின் முன்னேற்றம் சமாதானம், ஒற்றுமை முதலித உயர்ந்த லட்சியங்களுக்கு உதவி யளிக்க வேண்டும்.......... வகுப்புவாதத்தை விடாது, இரு சமுதாயக் கூச்சல் போட்டு வேற்றுமைகளை வளர்த்து, நாட்டை நாசம் செய்யவே நினைக்கிறார்களாயின் மரியாதையாக பாகிஸ்தானுக்குப் போய்விடுவதே நல்லது இங்கிருந்துகொண்டு நான்கு கோடி அப்பாவி முஸ்லிம்களை நாசம் செய்யவேண்டாமென அவர்களுக்கு ஆலோசனை கூறுகிறோம்.

அல்லாபிச்சை, B.A, B.L, அவர்கள் எழுதுகிறார்கள்.

"பண்டிட்ஜி, படேல் இவர்களுடைய பொறுமை, புத்திக்கூர்மை, தேர்ந்த அரசியல் ஞானம், அசையாத ஆண்மை முதலிய மட்டும் தலையிடாதிருந்தால் இந்தியாவும் ப கிஸ்தானும் சிலநாள் முன்னர் பேதமையான பயங்கரமான விளைவுகள் கொண்ட காரியங்களில் முனைந்திருக்கும். சமுதாயம், சமுதாய சேவை, முதலிய கருத்துக்களை பாகிஸ்தானின் பிரதம மந்திரி, நன்கு உணர்ந்துகொண்டார் என்று நாம் ஒப்புக்கொள்ள வேண்டியதே. இந்தோ—பாகிஸ்தான் ஒப்பந்தம், இரு நாடுகளுக்கும் ஏற்படவிருந்த ஆபத்தை அநேகமாகப் போக்கி உலகத்திடையே பேரானந்தத்தை ஏற்படுத்தியிருக்கிறது அன்பும், அறிவும் பண்பெனக் கொண்டு, மதிப்பும், மரியாதையுட்கொண்டு பழகுங்கால் நாம், வெறுப்பும் கொடுமையும் சாதிக்கவொண்ணாத பலவற்றைச் சாதிக்க முடியும்.

பண்டிட்ஜியை யாவருமே நேசித்து வந்துள்ளார்கள், ஒவ்வொருவரும் அவருடைய அல்லது அவளுடைய சக்திக்கேற்ப, முயன்று இந்தியருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே என்றுமழியாத அமைதியும், அன்பும், ஆனந்தத்தையும் நாட்டவிருக்கும் இந்த ஒப்பந்தத்தை வெற்றியுள்ளதாக்க செய்வாராக

தியாகியின் பரிதாப நிலை.

S தங்கசாமி பிள்ளை என்ற ஒப்பற்ற காங்கிரஸ் தியாகி, T. B வியாதியாலும் பணமில்லாக் கொடுமையாலும் வாடி வருந்துகிறார் என்று அறிகிறோம். உரிமை யிருந்தும், தகுதி யிருந்தும் அவருக்கு வீரமான்ய நிலம் வழங்கப்படவில்லைபோலும்!

ஆகவே அந்த அன்பருக்கு அரசாங்கத்தாரும், காங்கிரஸ்காரரும் போதிய அளவு அவருக்கு உதவி செய்யவேண்டும் என்று அன்பர் ஏ. தாமோதரன் கோருகிறார்.

ஆஸாத்

தமிழ் தேசிய மாதமிருமுறை பத்திரிகை

மலர் 3 } 17—4—1950 திங்கட்கிழமை { இதழ் 2

லீக் பத்திரிகையின் மயக்கம்.

———o———

இரண்டு பேர்வழிகளில் 'யார் நல்லவன்' என்பதுபற்றி சில மக்களுக்கிடையே சச்சரவு எழுந்தது. சமாசத்திற்கு 'ஸாது' ஒருவரை நாடினர். அவர் ஒருவனை அழைத்துக் கூறினர். 'அப்பா, இந்த ஊரில் மூலைமுடுக்குகள் விடாமல் சுற்றி ஒரு கொடியவனையாவது தேடி அழைத்துவா' என்று மற்றவனைப்பார்த்து 'அப்பா, இந்த ஊரில் நீயறிந்த நல்லவன் இருந்தால் அழைத்துவா பார்க்கலாம்' என்றார்.

இருவரும் திணறத்திணற தேடினார்கள். முடுக்குகளில் எல்லாம் புகுந்து மீண்டார்கள். முதலாவது ஆசாமி ஸாதுவிடம் சொன்னார் 'ஸ்வாமி கெட்டவன் ஒருவனையும் என்னால் காணமுடியவில்லை யாவருமே நல்லவராகத்தானே இருக்கிறார்கள்' என்று மற்றவன் கூறினான், 'ஸ்வாமி, எத்தனை கெட்ட உலகம் இது என்கிறீர்கள். ஒருவராவது நல்லவன் அகப்பட வேண்டுமே!'' என்று

ஸாது எளிதிலே தீர்ப்புக் கூறினர் 'முதலவன் தான் நல்லவன்' என்று ஏன் தெரியுமா? ஒவ்வொரு மனிதனும் தன்னையே பிறருள்ளும் காண்கிறான். தீயவனுக்கு ஒருவருமே நல்லவராகத் தென்படுவதில்லை. நல்லவனுக்கோ கெட்டவனில்லை.

மேலே கூறிய கதை ஞாபகம் வருகிறது முஸ்லீம் முரசு, சென்னையில் நடந்த முஸ்லீம் மகாநாட்டை ''உதிரிகள் மகாநாடு'' என்று குறிப்பிடுவதைப் படிக்கும்பொழுது. முறையற்றவனுக்கு, முட்டாளுக்கு, புத்திமானை தேர்ந்தெடுக்குந்திறன் இல்லாதிருப்பதுதானே இயற்கை

உடனிருந்தே கொல்லும் வியாதி யென்பர். இன்று நம்முடனிருந்து, இழைந்திழைந்து பழகுவதுபோன்று பாசாங்குசெய்து பசப்புவார்த்தைபேசி, மயக்கி, படுகுழியில் ஆழ்த்தி விடத்திட்டமிட்டிருக்கிறது முஸ்லீம் முரசு.

ஆனால் நாமோ விழிப்படைந்துவிட்டோம். 'முஸ்லீம் முரசு' கிளப்பிவிடும் வியாதிக்கு மாற்று மருந்தாக நாம் சுல்தான் அஹ்மத்கான் அவர்களுடைய சொற்பொழிவை கொடுக்கிறோம்

அவர் தெள்ளத் தெளிபக் கூறிவிட்டார் அலஹாபாத் ஷியாமுஸ்லீம் மகாநாட்டில்.'

''தனிவகுப்புவாத அரசியல் ஸ்தாபனம் இருப்பது குறிப்பிட்ட அந்தஸ்தாபனத்திற்கோ. அல்லது இந்தியாவின் நலனுக்கோ உகந்ததல்ல என்று எங்களுக்கு விளங்கிவிட்டது. நாட்டில் ஐக்யம் ஏற்படுத்தவும், அதைப் பலப்படுத்தவும் நாம் நம்மாலான முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும்.'' என்று

இத்தகைய கருத்துக்களடங்கிய சொற்பொழிவுகள் நமக்கு இதுவரையில் ஏராளமாகக் கிடைத்துவிட்டன தலைசிறந்த பெரியார்பலர் இதை எவ்வளவோ நாட்களாக கூறிவந்துள்ளார்கள். இந்தியாவில் முஸ்லீம்களின் கடமை என்ன என்பது பற்றிப் பேசுகையில் மௌலானா அபுல்கலாம் ஆஸாத் அவர்கள் கூறினார்கள்.

''சில ஆயிர வருஷங்களுக்குமுன் நாம் சேர்ந்து வாழ்ந்த வாழ்வு நம்மெல்லோரையும் ஒரு சமுதாயத்தினாக வார்த்துவிட்டது. எத்தனையோ நாட்களாக தன் இரகசியமான வழிகள் பலவற்றால் இயற்கை இதைச் செய்திருக்கிறாள் வார்ப்பும் உருவாகிவிட்டது. முத்திரையையும் அதன்மேல் பொருத்தியாகிவிட்டது. விரும்பியோ விரும்பாமலே நாமெல்லோரும் இருகிக்கலந்த, இனி பிரிக்கமுடியாத இந்திய நாட்டைச்சேர்ந்தவர்களாகிவிட்டோம். வீணெண்ணங்களும், வேண்டுமென்ற செய்யப்பட்ட சூழ்ச்சிகளும் அதன் ஒற்றுமையைக் குலைப்பதற்கில்லை. சரித்திர நிகழ்ச்சியின், சாதிக்கப்பட்ட உண்மையின், தர்க்கத்தை நாம் ஒப்புக்கொண்டு, பிற்கால நல்வாழ்வுக்கு அடிகோலும் முயற்சிகளிலே முனைவோமாக!'' என்று.

இந்தியாவில் முஸ்லீம்களின் கடமை என்ன என்பதை சுல்தான் அஹ்மத் அவர்களும் தெளிவுறக் காட்டுகிறார்.

(i) ''தனித்து ஒதுங்கியிருப்பதால் உண்டான நாசகரமான விளைவுகளை நாம் கண்டு விட்டோம். எந்த நாட்டில் நாம் இருக்கிறோமோ, அந்த நாட்டிடம் நாம் அபிமானம் காட்டவேண்டும். இக்கொள்கையிலிருந்தும் நாம் வழுவக்கூடாது

(ii) மத சம்பந்தமான கோரிக்கைகள் போட்டு இந்தியாவின் அரசியல் வாழ்வைக் குலைக்கும் எண்ணத்தை விட்டொழிந்தால்தான் நம் நாட்டிலுள்ள வகுப்புவாதஸ்தாபனங்களின் பிற்போக்குக்கான காரியத்திட்டங்களிலிருந்து மீண்டுவந்து உயிரோடிருக்க முடியும்.

(iii) இந்தியாவில் தற்போதுள்ள வகுப்புவாத மற்ற கட்சிகள் இரண்டே தான்; காங்கிரஸ்கட்சி ஒன்று, சோஷலிஸ்டு கட்சி இரண்டு. காங்கிரஸ் நாட்டிற்குச் செய்துள்ள சேவையும் தியாகமும் ஒப்பற்றது........ நாட்டின் தற்போதைய நெருக்கடியான கட்டத்தில் காங்கிரஸால் இந்தியாவைக் காப்பாற்ற

பிரிவினைக்கு முன், குவாஜா முகம்மது அப்பாஸ்

—(மொழி பெயர்ப்பு: வீர. வேக்கடாமணி)—

நாட்டை 'இந்தியத் தண்ணீர்' 'முஸ்லிம் தண்ணீர்' என்று இரு பிறிவுகளாக்க நீண்டகாலமாக முயற்சி எடுத்துவரும் பாகிஸ்தான் ஒரு அரசியல் பிரச்னை மாத்திரமல்ல. அது ஒரு பொருளாதாரப் பிரச்னையாகும் சமூக, சமுதாயப் பிரச்னையாகும். ஆனால் இவை எல்லாவற்றையும்விட கவனிக்க வேண்டியது அது தனியொருவனைச் சேர்ந்த பிரத்தியேகப் பிரச்னை என்பதுதான்.

அதன் மற்றையதொடர்புகள் யாவும் ஐயந்திரிபற ஆராயப்பட்ட காலத்தும் கூட அதனுடைய தனி மனிதப் பிரத்யேகச் சார்புமட்டும் ஆராயப்படாது தப்பி வந்திருக்கிறது

அப்படி ஒருகால், ஒருபொழுது பாகிஸ்தான் பலாத்காரப் படுத்தப்பட்டு உருக்கொண்டால் அப்பொழுது இதே தனி மனிதச்சார்பு, அல்லது தொடர்பு என்ற ஒன்றுதான் அநேகமாக எல்லோரையும் பாதிக்கச்செய்யும், உற்றாரும், கேளிரும், உயிருக்கினிய நண்பர்களும், பிரித்தெடுத்துச் சொல்லப்பட்டு, தடுக்கப்பட்ட அரசியல் பட்டிகளிலே தள்ளப்படுவர். என்றுமில்லாத ஏக்கத்துடன் எத்தனை மக்கள் "தன் பிறந்த நாட்டிலே தான் ஒரு அயல்நாட்டான் தன்னுடைய அரசியல்உரிமைகள் பறிக்கப்பட்டுவிட்டன" என்ற தீர்மானத்திற்கு வரவேண்டியிருக்கும்! ஆனால் கொடிதினும் கொடிதானஒன்று இன்னும் கூறப்படாது நிற்கின்றதே! அதுதான் தர்க்க ரீதியில் தொடர்ந்து வரக்கூடிய விளைவு. எத்தனை எத்தனை மக்கள், வீடு, குடிசைகளிழந்து "எங்கு உன் சொந்த பாஷை வழக்கங்கள், நிலவுகின்றனவோ, அங்கு ஓடு" என்று வெருட்டி விரட்டப்படுவர்!

ஆகவே சாதாரண ஆண், பெண், குடும்பங்கள் சம்பந்தப்பட்ட வரையிலேயே, நான் பாகிஸ்தான் விளைவிக்கக் கூடிய பயங்கர விளைவுகளைப் பார்க்கின்றேன் இந்தக் கண்கொண்ட ஆராய்ச்சிதான் இந்த நோக்கங்கொண்ட விழைவுதான் நியாயமானது நேர்மையானது,

நமக்குள் சண்டைகள் நிகழ்கின்றன ஏன் ?

" இரண்டு மாபெரும் லட்சியக் கொள்கைகளுக்கிடையே ஏற்படவேண்டிய பெரு மோதல்" என்று நாம் அதைக் கருதுவதால்தான் அத்தகைய வெகுளியின் வேகத்திலே நாம் மறந்து விடுகிறோம், இது சாதிக்கப்படுவது மட்டற்ற மக்களுடைய தியாகத்தினால் அல்ல அவர்களுடைய உயிர்ச்சேதத்தினால் தான் என்று "எண்ணற்ற மக்களுடைய வீடு, வாசல் சொத்து, சுதந்திரம் முதலியவற்றின் தியாகத்தால் அல்ல. அவை பறிக்கப்படுவதால் என்று மனிதனுக்கு மனிதன் இழைத்த தேவையில்லாத, தடுக்கப்படக் கூடிய வெங்கொடுமையல்ல இது என்றைக்காவது தோன்றி சீற்றங் காட்டும் கடவுளின் சினம்தான் இது" என்ற நினைப்பு நம்மை விட்டு நீங்காதவரை, நம்மை இந்த தொத்து வியாதிகள் தாக்கி தீராத தொல்லை கொடுத்துக்கொண்டேதான் இருக்கும்.

"இரண்டு பெரிய சமுதாயங்களுக்கிடையே ஜாதிகளுக்கிடையே, மதங்களுக்கிடையே ஏர்ப்பட்ட சச்சரவு" என்ற முறையிலே மட்டும் இதை நோக்குவோமானால், "தனிமுஸ்லிம் ஒருவனுக்கும், தனி இந்து ஒருவனுக்கும் இடையே ஏற்படக் கூடிய சச்சரவு இது, என்றுமட்டும் கருதி அநேக ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்து சுகம்பெற்ற அக்கம் பக்கத்து வீட்டார்களுக்

முடியும் என்று நான் நம்புகிறேன் ஆகவே நாம் அதனுடன் சேர்ந்து விடுதலே நலம்" என்று.

ஹிந்துஸ்தானத்தில் முஸ்லிம்களின் நிகழ்கால நல் வாழ்வு அவர்களுடைய இன்றைய 'நடத்தை'யைப் பொறுத்ததாகும். இன்றே அவர்கள் ஒரு நிச்சயமான, ஒழுங்கான, வழிசெல்லத் தீர்மானிக்கவேண்டும். இன்றைக்கென்றும் நாளைக்கென்பதும் இல்லையென்பதற்கு அடையாளமாகும்.

ஒத்த மனப்பான்மையுடன் தங்களாலான ஊழியத்தைச் செய்தும், பொறுமையாக வேலைசெய்தும் பிரிவு மனப்பான்மையைப் பரப்பும் சமுதாயசங்கங்களின் விளைவு காரணமான சந்தேகத்தையும், நம்பிக்கையின்மையையும் துடைத்தெரிய விழையவேண்டும். இந்துக்களை நண்பர்கள் என எண்ணி எண்ணி நாளும் அவர்களுடன் ஒததுழைப்பதில் நாட்டம் கொள்ள வேண்டும், மனத்திடைதொங்கும் மூடத்திரையினை

விலக்கி பளிங்குபோன்ற களங்கமற்ற உள்ளத்துடன் ஒத்துழைக்கவேண்டும்.

இந்தியாவிலே, பாகிஸ்தானோ, இந்துஸ்தானோ இன்னபிற சீக்கிஸ்தானோ போன்ற இனப்பிரிவினைப் பிரதேசங்களோ. அல்லது எல்லைக் கோடுகளோ இல்லை மதச்சார்புகள் கொண்ட கட்சிகள் இந்தியாவுக்குத் தேவையில்லை

இன்று யாரோனும் 'முஸ்லீம் லீக்' கட்சியின் நீட்சிபெற்ற வாழ்வுக்காக முயல்வாராயின் அவர்தம் தனிக்கருத்து தன்னலனின்றிப் பிறிதொன்றுமில்லை.

இவைகளை மனத்திலிருத்தி நாம் ஒத்துழைப்பு மனப்பான்மையுடன் முன்னேறுவோம். "சோதரத்வம், மானிடத்தன்மை, அன்பு, அமைதியில் நாட்டம், அனைத்தும் வல்ல இறைவனிடத்து அசைவுறு நம்பிக்கை" இவைகள் நம்முடைய சூளுரையாக இருக்கட்டும்.

கும், அருமையான நண்பர்களுக்கும் ஒருவர்க்கொருவரிடையே ஏற்படக்கூடிய சச்சரவு இது" என்பதை நாம் மறந்தோமானல், உளையறியாத மூடர்களாய், உளைசேற்றிலே ஏருத ஆழத்திலே, பாகிஸ்தானிலே, காலை ஊன்றி, உய்ய வகையறியாது விழிக்கவேண்டியவராவோம் ....

மாற்றுவழி காண முடியாது, மனம் சோர்ந்து ராஜாஜி போன்ற சிரிய இந்தியர்கள் கூட ஒப்புக்கொண்ட, இரு சமுதாயக் கொள்கையே பாகிஸ்தானின் அடிப்படை. இந்த அடிப்படைக் கொள்கையை அஸ்திவாரக் கொள்கையைத் தகர்த்தெரிவது அப்படியொன்றும் பிரமாதமல்ல.

இரு சமுதாயக்கொள்கை கருதுகிறது; "இந்திய முஸ்லிம்கள்யாவரும் பழக்கங்களால், பொருளாதாரச் சிந்தனைகளால், சேர்க்கை பிணக்கங்களால், நிர்வாக நோக்கங்களால், மொழிச்சார்புகளால், மற்றும் இவை போன்ற பலவற்றாலும், தனித்து வாழவேண்டிய பிரிவினர்" என்று

ஆனல் ஒரு முறை உற்று நோக்கினல் தெள்ளத் தெளிய விளங்கும். வங்காளி முஸ்லிம், வங்காளி பாஷையில் அழகாக, வேகமாகப் பேசுகிருன். டெல்லியிலும், உ. பி. யிலும் வாழும் இந்துக்கள் அதேமுறையில் அழகாக, வேகமாக உருதுபேசுகிருர்கள். எல்லைப்புற இந்தியர்களோ, சால்வைகள் அணிகின்றனர். அவர்களில் அனேகம்பேர், உருதுலிபியில் எழுதக்கூட வல்லவராயிருக்கின்றனர் கோஜா வியாபாரிகள் கணக்கெழுதுவது குஜராத்தியிலே பஞ்சாப் ஹிந்து மகாசபையினர் உருதுவிலே அச்சிடும் பத்திரிகைகளில்லையா? பம்பாயிலோ குஜராத்தியில் பல முஸ்லிம் பத்திரிகைகள் வெளிவருகின்றன.

ஆகவே நாம் அறிகிருேம். இந்தியாவின் பல மூலைகளிலும் வாழும் முஸ்லிம்களின் வழக்கங்களிலும் சரி, பேசும் மொழிகளிலும், மற்றும் மேலே கூறிய பல வழிகளிலும்சரி, ஒன்ருகவேயிருக்கவில்லையென்று இந்த முறைகளிலே ஒற்றுமையும், ஒருதலை மனப்பான்மையும் காணப்பட்டால் மாத்திரமே பாகிஸ்தானின் இரு சமுதாயக் கொள்கை வாதத்தில் வெற்றி பெற முடியும்... ....

பம்பாய் வந்தது முதல் என் இந்து நண்பர்கள் நித்தமும் அதிகரித்துக்கொண்டே வருகிருர்கள். எத்துணை ஆசார இந்துக்களின் வீடுகளிலே, குடும்பத்துள் ஒருவனைப்போன்று, நானும் ஏற்றுக்கொள்ளப்பட்டேன் தெரியுமா? நான் கலந்துகொண்ட மணச் சடங்குகள் பிணக்காட்சிகள், மதக் கொண்டாட்டங்கள் தான் எத்தனை? வெற்றிக்கோலங்களிலே, வீழ்ச்சிப் படுதுயரத்திலே, எக்களித்து வரும் இன்பத்திலே மனமிடிந்த ஏக்கத்திலே, ஒவ்வொன்றிலும் அவர்கள் என்னுடன் சமயங்கு கொண்டார்கள். என்வாழ்க்கையிலும், வேலையிலும் தேவையானபொழுதெல்லாம் அவர்கள் எனக்கு உதவினர். நானுங்கூட அவர்களுக்கு உதவி செய்ய முயன்றிருக்கிறேன். அவர்களுடன் கூட நான் அரசியல் வாதங்கள் செய்தேன். சமூக சர்ச்சகள் நடத்தினேன். அவர்களுள் ஒருவனகவே நானும் சுதந்திரக் கனுக்கண்டேன்.

இத்தகைய நான் "உனக்கும் அவர்களுக்கும் இடையே ஒத்தவை ஒன்றுமில்லையப்பனே! நீயும், அவர்களும் தனித்தனி நாட்டைச் சேர்ந்தவர்கள்" என்று கூறப்படுவேனு? "பிரிந்துவிட்ட பாகிஸ்தானுக்குபோ" என்று போதிக்கப்படுவேனு? இதத்தைத் தந்த இனிமையான என் இந்து நண்பர்களைக் காண விரும்பும் ஒவ்வொரு சமயமும் அனுமதிச் சீட்டின்றி நான் அவர்களை அணுக முடியாதா? அப்படியே நான் தங்கி வாழ விரும்பினுலும் நான் அயலானக நடத்தப்படுவேனு? எனக்கு சட்டரீதியான அரசியலுரிமைகள் அளிக்கப்படாவா?

இத்தகைய என் இதய ஏக்கங்களை பன்மடங்காகப் பெருகிக்காணுங்கள். அப்பொழுது விளங்கும் பாகிஸ்தானின் பிரிவால் வரப்போகும் விளைவுகள்.

ஆகவே நான் உறுதிகொண்டுவிட்டேன், இந்துஸ்தானில் வசிக்கவேண்டிய கடைசி முஸ்லிம் என்ற நிலை வந்தாலும் சரி, நண்பர்களையும், உற்ருர் உறவினரையும் பிரிய நேரிட்டாலும் சரி, உரிமைகள் பறிக்கப்பட்டாலும் சரி, நான்பாகிஸ்தான் சென்று வாழமாட்டேன் என்று. பரிதவித்துத் திரியும் அகதியாக இருப்பேன், பாகிஸ்தானியாகமாட்டேன் என்று.

காந்திபாளையம்.

டவுன் காங்கிரஸ் கமிட்டி, மேலப்பாளையம்,
3—4—50.

மேலப்பாளையம் முனிசிபல் ஆபீசில் 31-3-50-ந் தேதி மாலை 4-30-மணிக்கு சேர்மன் ஜனப் V. S. T முஹம்மது இபுராஹீம் அவர்கள் தலைமையில் கவுன்சிலர்களின் கூட்டம் நடந்தது. அதில் ஒச்சன்குளத்தில் புதிதாய் வீடுகள் கட்டப்பட்டிருக்கும் இடத்திற்கு "காந்திபாளையம்" என்று பெயர் வைக்கும்படி ஜனப் V. S. T. ஷேக்மன்சூர் Ex, M. L. A. அவர்களால் பிரரேபிக்கப்பட்டு ஷை இடத்திற்கு 'காந்திபாளையம்" என்ற பெயர் ஏகமனதாக வைக்கப்பட்டது

மேற்படி மீட்டிங்கில் ஜனப் V. S. T ஷேக்மன்சூர் Ex, M. L. A அவர்களை ஜில்லா கல்வி கமிட்டிக்கு மெம்பராக ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டது.

M. R. உலகநாதன்,
காரியதரிசி.

— ஆசிய சமஷ்டி —

ஆப்கனிஸ்தானம் இந்தியாவின் ஒரு பாகமாகவே இருந்துவந்துள்ளது சரித்திரம் கண்ட உண்மை. அலெக்ஸாண்டரின் கவர்னராயிருந்து அவருடைய மரணத்திற்குப் பின் கிழக்கு சாம்ராஜ்ய நாடுகளுக்கு சக்ரவர்த்தியான செலூகஸ் நிகேடாரை சந்திரகுப்தமௌரியன் தோற்கடித்தபோது, தோல்வியடைந்ததற்கறிகுறியாக, இன்று ஆப்கனிஸ்தானம் என்று அழைக்கப்படும் பிரதேசம் சந்திரகுப்தருக்கு செலூகஸால் அளிக்கப்பட்டது. மஹாராஜா அசோகரின் கல்வெட்டுக்கள், புத்தமதத்தின் சின்னங்கள் முதலியவற்ருல் அக்காலத்தில் காபூல் இந்திய அரசாட்சியில் ஒரு முக்கிய பட்டணமாய்த் திகழ்ந்து வந்ததெனத்தெரிகிறது. கனிஷ்கரின் காலத்தில் இப்பிரதேசம் இந்திய நாட்டுடன் சேர்ந்தேயிருந்தது. கஜ்னி, கோரி வம்ச ஆட்சியின்போதும் ஆப்கனிஸ்தான், பஞ்சாபுடன் இணைந்தே இருந்துள்ளது. பிறகு ஒரு சிறு காலத்திற்கு அது தனித்திருக்க நேர்ந்தது. ஆயினும் பாபரின் காலத்தில் அது மறுபடியும் மாத்ருபூமியின் பாகமாகி நெடுங்காலம் இருந்துவந்தது. அஹ்மத்ஷா அப்தாலி ஆப்கனிஸ்தானை இந்தியாவினின்றும் துண்டித்து ஒரு சுதந்திர நாட்டை சிருஷ்டித்தார். இன்றளவும் அது இருந்து வருகிறது.

சரித்திர ஆராய்ச்சிக்குப்பின், பூகோள ரீதியாய் அறிந்தாலும் ஆப்கனிஸ்தான், இந்தியாவின் பாகமாக இருந்துவந்துள்ளதை சந்தேகமறத் தெரிந்துகொள்ளலாம், ஆப்கனிஸ்தானின் வடக்கு எல்லையாயிருப்பது அமுதர்யா நதியாகும். இந்நதி ஆரம்பத்தில் மேற்கில் பாய்ந்து பிறகு வடக்கில் பாய்ந்தோடுகிறது பாமிர் மலைகள் ஆசியாவை, வடக்கு, தெற்கு இரு பாகங்களாய்ப் பிரித்துவிடுகின்றன. ஆகவே வடபாகத்தில் உற்பத்தியாகும் நதிகள் வடக்கை நோக்கியும் தெற்கில் தோன்றும் நதிகள் தெற்கிலும் பாய்கின்றன. ஆப்கனிஸ்தான் ஹிமாலய மலைகளிலடையேயுள்ள ஓர் நாடே.

பிரஜைகள் தங்கள் வாழ்க்கைச் சாதனங்களை பெரும் பிரயாசையுடன் மிக கஷ்டப்பட்டு தேடும் அளவு அதன் பொருளாதார நிலைமை சீர் கெட்டுள்ளது ஆகவே அது மிகவும் எழ்மை மிகுந்த நாடு. நாட்டின் நிர்வாகச் செலவு மிக சொற்பமேயாயினும் பெரும் கஷ்டத்துடனேயே பூர்த்தி செய்யப்படுகின்றன. அதற்குக் காரணம் இந்நாடு பலகாலம் அந்நிய நாடுகளின் ஓர் அங்கமாயிருந்து வந்ததே எனலாம். மொகலாய ஆட்சியில் சயால்கோட், கோஜரான்வாலா, ஷேகூபூரா, குஜ்ராத் முதலிய நான்கு பாஞ்சால ஜில்லாக்களின் நிலவரி காபூல் நிர்வாக செலவுக்காக விலக்கப்பட்டுவந்தது. ஆங்கில சாம்ராஜ்ய காலத்தில் டில்லியிலிருந்து பெரும்தொகை ஆண்டுதோறும் காணிக்கையாக அளிக்கப்பட்டு வந்தது. அந்நாட்டின் வர்த்தகம் அநேகமாய் இந்தியநாட்டுடனேயே இருந்து வந்துள்ளது! ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரம் இந்திய துறைமுகங்கள் மூலமே நடைபெற்றுள்ளது.

அரசியல் துறையில் அப்கானிஸ்தானம் இந்திய நாட்டுடன் தொடர்பு கொள்வது மிகவும் நல்லது. ஏனெனில் தற்காலம், சிறு சிறு நாடுகள். தனித்து நின்று, தங்கள் சுதந்திரத்தை காப்பாற்ற முடியாது. சொற்ப வருமானம் கொண்ட நாடுகளின் சுதந்திரத்திற்கு பாதகம்ஏற்படும் அளவில் விஞ்ஞானம்வளர்ந்து விட்டது. அமெரிக்காவைப் போன்ற மாபெறும் சக்தியுள்ள நாடும், தேசப் பாதுகாப்பைக் கருதி, அகில அமெரிக்க நாடுகளின் ஐக்கிய சமஷ்டி யொன்றையேற்படுத்தியுள்ளது மறுபுறம் ரஷ்யா, கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சைனு முதலிய நாடுகளைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டுள்ளது பிரிட்டிஷ் அரசாங்கம் மாபெரும் அரசாங்கமே; ஆயினும் நவீன காலப்போக்கை அநுசரித்துமேற்கு ஐரோப்பிய நாடுகள் ஒத்தாசையுடன், ஐக்கிய அணியை ஏற்படுத்தி, அமெரிக்காவின் ஆதாரவையும் தேடியுள்ளது. இவையாவும்வெளிப்படையாய் நடைபெருகின்றன ஆயினும் துரதிர்ஷ்டம் பிடித்த ஆசிய நாடுகள் இன்னும் கண் திறக்கவில்லை. தாங்களும் ஒற்றுமையுடன் ஒன்ருகிவிடவேண்டும் என்ற நினைவு யேற்படாவிடினும், அமெரிக்க பிரிட்டிஷ் வலையில் சிக்கி, தனித்தனியாய் குட்டிக்கரணங்கள் போடுவதில் குறைவில்லை சிலர் ரஷ்யாவின் மாயவலையில் சிக்கித் தவிக்கின்றன. ஐரோப்பிய நாகரீக மோகம் கொண்ட ஆசிய தலைவர்கள், ஐரோப்பியருடன் கைகுலுக்குவதை மோட்ச சாம்ராஜ்யமென கொண்டாடுகின்றனர். இவ்வைரோப்பியர்கள், இந்தோ-னேஷியா, இந்தோ-சீனு, மலேயா முதலிய நாடுகளின் ஆசியர்களை நசுக்கி குற்றியுராக்கியும், தென்னுப்ரிக்க இந்தியர்களை தீண்டப்படாதவராய் பாவித்தும் அக்கிரமம் புறிந்துவரினும், நம் இந்திய தலைவர்கள், அவர்களுடைய சபைகளில் பிரவேசிக்க உரிமை பெற்று விட்டனராயின் வைகுண்ட வாசத்திற்கு அனுமதி பெற்றுவிட்டதாய் நினைத்து இந்த லோக விஷயங்களை நினைத்தும் பாராமல், குறிப்பாய் இன வேறுபாடு சாபக்கேட்டை தங்கள் புனித இதயங்களினின்றும் வெளியேற்றி வெள்ளை தேவர்களை துதிபாட ஆரம்பித்துவிடுகின்றனர்.

(அடுத்த இதழில் முடியும்)

ஏஜெண்டுகளில்லாத நகரங்களுக்கு.
"ஆஸாத்"
விற்பனை செய்ய ஏஜெண்டுகள் தேவை.

— எங்களிடம் —

பலவிதமான பேப்பர்கள்,
அக்கவுண்ட்புக்குகள், ஸ்கூல் மாண
வர்களுக்கு வேண்டிய நோட்புக்கு
கள், பெப்பர்மிண்ட்கள், சோப்புகள்
சென்டுகள், பேட்ரி லைட், பீங்கான்,
கண்ணடிசாமான் வகைகள், பனி
யன்கள், சூட்கேஸ்கள், குடைகள்
இன்னும் மற்ற ஷாப் சாமான்களும்
கிடைக்கும்.

*

K. M. P. பக்கிரிசாமி பிள்ளை

ஜவுளி அண்டு ஜெனரல் மர்ச்செண்ட்,

கடைத்தெரு, — கும்பகோணம்.

ஸ்தாபிதம் 1909.

தந்தி விலாசம்:—“ கோகுல் ” டெலிபோன் நெ. 57.

டி. எஸ். ஆர். அண் கோ.,

கும்பகோணம்.

பிராஞ்சு:—
மதரூஸ் & மன்னார்குடி.

சந்தனாதித் தைலம்
அரைக்கீரைவிதைத் தைலம்
கோகுல் கூந்தல் தைலம்

கூந்தலுக்கு வளர்ச்சியையும்,
குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்றவை.

மற்றும்

கோகுல் ஊதுவத்திகள்
பல காய்கறி ஊறுகாய்
ரோஜாப்பூ குல்கந்து
வாசனைப் பாக்கு
வாசனை சுண்ணும்பு
அரகஜா

முதலிய இதர சாமான்களும் கிடைக்கும்.

Printed by! V. Jayaram at his Sri Rama (Power) Printing Works, 38, Sarargapani East Vadamboki St, Kmu
Edited and Published by Moulana Abdul Hakeem, 4, Kumbeswaran South. Kumbakonam.